# கணவரின் பெயரை முன்னெழுத்தாக இட பெண்களை கட்டாயப்படுத்தக் கூடாது

## ஆளுநர் கிரண் பேடி



விழாவில் பேசிய புதுவை துணை நிலை ஆளுநர் கிரண் பேடி.

**புதுச்சேரி, ஜன. 25:** திருமணத்துக்கு பிறகு கணவர் பெயரை முன்னெழுத்தாக இட பெண்களை கட்டாயப்படுத்தக் கூடாது என்று புதுவை துணை நிலை ஆளுநர் கிரண் பேடி வலியுறுத்தினார்.

புதுவை ஆளுநர் மாளிகையில் இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் புதுவை மண்டலம் சார்பில், நடைபெற்ற தேசிய பெண் குழந்தைகள் தின விழாவில் ஆளுநர் கிரண் பேடி பேசியதாவது:

பெண் குழந்தைகள் சாபம் அல்ல. அது வாழ்வின் வரம். ஆண்கள் பெண்களை சமமாகப் பாவிக்க வேண்டும். தற்போது, பெண் குழந்தைகள் தைரியமாக உள்ளனர். சுதந்திரமாக யோசிக்கின்றனர். இதற்கெல்லாம் கல்விதான் காரணம். பெண்கள் திருமணத்துக்கு பிறகு கணவரது பெயரை முன்னெழுத்தாக (இனிஷியலாக) போட்டுக் கொள்கின்றனர். இதை கட்டாயப்படுத்தக் கூடாது. விருப்பப்பட்டால் தந்தை, தாய் பெயரைக்கூட போட்டுக் கொள்ளலாம் என்றார் அவர்.

தொடர்ந்து 'பெண் குழந்தைகள் இயற்கையின் பரிசு' என்று விளக்கி பொம்மலாட்டம் 25 நிமிடங்கள் நடைபெற்றது. இதை பார்வையற்ற மாற்றுத் திறனாளி கலைஞர்கள் ஜோசப் ஆண்டனி, சாலை மாரியம்மன், மாற்றுத் திறனாளி கோகுல் உள்ளிட்ட 6 கலைஞர்கள் நிகழ்த்திக்காட்டினர். இதையடுத்து, லாசுப்பேட்டை தன்னம்பிக்கை குழுவின் 'மகளே மகிழ்ச்சி' என்ற குறும்படம் திரையிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஆளுநர் கிரண் பேடி பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடினர். விழாவில், முத்துரத்தின அரங்கம் மேல்நிலைப் பள்ளி, பிரசிடென்சி மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 150 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இந்திரா காந்தி தேசிய கலை மைய புதுச்சேரி மண்டல இயக்குநர் கோபால் நன்றி கூறினார்.

CHENNAI THE HINDU
SATURDAY, JANUARY 25, 2020

# Kiran Bedi interacts with schoolchildren

## National Girl Child Day celebrated



Lt. Governor Kiran Bedi addressing children and teachers at Raj Nivas on Friday. ▪SPECIAL ARRANGEMENT

**SPECIAL CORRESPONDENT**
PUDUCHERRY

Lieutenant Governor Kiran Bedi on Friday celebrated the National Girl Child Day with 150 students and staff of Muthu Rathinam Arangam Higher Secondary School at Koundan Palayam and Presidency Higher Secondary School at Reddiyarpalayam.

**Puppetry show**

As part of the celebrations at Raj Nivas, a puppetry show with theme "girl children are boons of the nature divine" was held. The show was conducted by six artistes, including three differently abled persons, according to a press release.

A 12-minute documentary titled "Endeared daughter" was screened. The documentary dealt with the story on how a father who hated the birth of his daughter later changed his mind to be an admirer of her. The Lt. Governor interacted with the students, the release added.

www.dinamalar.com
புதுச்சேரி
• சனி • ஜனவரி 25 2020

தினமலர்
புதுச்சேரி

# கணவர் பெயரை இனிஷியலாக போட கட்டாயப்படுத்தக்கூடாது: கிரண்பேடி



புதுச்சேரி ராஜ்நிவாசில் நடந்த தேசிய பெண் குழந்தைகள் தின விழாவில் கவர்னர் கிரண்பேடி பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

**புதுச்சேரி, ஜன. 25–**

பெண்கள் திருமணத்திற்கு பிறகு கணவரது பெயரை இனிஷியலாக போட்டுக் கொள்ள கட்டாயப்படுத்தக் கூடாது என கவர்னர் கிரண்பேடி பேசினார்.

ராஜ்நிவாசில் இந்திரா காந்தி தேசிய கலை மையம் புதுச்சேரி மண்டலம்சார்பில் நேற்று நடந்த தேசியபெண் குழந்தைகள் தின விழாவில் கவர்னர் கிரண்பேடி பேசியதாவது;

பெண் குழந்தைகள் சாபம் அல்ல; அது வாழ்வின் வரம். ஆண்–பெண்ணை சமமாக பாவிக்க வேண்டும். இன்றைக்கு பெண் குழந்தைகள் தைரியமாக உள்ளனர். சுதந்திரமாக யோசிக்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் கல்வி தான்.

பெண்கள் திருமணத்திற்கு பிறகு கணவரது பெயரை இனிஷியலாக போட்டுக்கொள்கின்றனர். இதன கட்டாயப்படுத்த கூடாது. விருப்பப்பட்டால் தந்தை, தாய் பெயரை போட்டுக்கொள்ளலாம். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து 'பெண் குழந்தைகள் இயற்கையின் பரிசு' என்று விளக்கி பொம்மலாட்டம் 25நிமிடங்களுக்கு நடந்தது. இதனை பார்வையற்ற கலைஞர்கள் ஜோசப் ஆண்டனி, சாலை மாரியம்மன், மாற்றுதிறனாளி கோகுல் உள்ளிட்ட 6 கலைஞர்கள் நிகழ்த்தி காட்டினர்.

பின் லாஸ்பேட்டை தன்னம்பிக்கை குழுவின் 'மகளே மகிழ்ச்சி' என்ற குறும்படம் திரையிடப்பட்டது. பெண் குழந்தை வெறுக்கும் தந்தை பிற்காலத்தில் தனது தவறை உணர்ந்து திருந்தும் கருத்தை மையப்படுத்தி இருந்தது. தொடர்ந்து கவர்னர் கிரண்பேடி பள்ளி மாணவர்களுக்கு கலந்துரையாடினர்.

விழாவில் முத்துரத்தின அரங்கம் மேல்நிலைப் பள்ளி மற்றும் பிரெசிடென்சி மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த 150 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

இந்திரா காந்தி தேசிய கலை மைய புதுச்சேரி மண்டல இயக்குனர் கோபால் நன்றி கூறினார்.